சுருக்கம்

குழு - வணிகவரித்துறை - மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனை குழுவினை மாற்றியமைத்தல் — ஆணை — வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத்(டி2)துறை

அரசாணை (நிலை) எண்.26

நாள்: 05.02.2021
சார்வரி, தை–23
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.131, வணிகவரி மற்றும் பதிவு (டி2)த்துறை, நாள் 06.07.2007
2. The Secretary, Department of Industrial Policy & Promotion, Ministry of Commerce & Industry D.O.Letter No.5(103)/2016,BE-111, dated 08.01.2019.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையரின் குறிப்பு எண்.Acts cell-III/15241/2019, நாள் 14.05.2019.

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவினை அமைத்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் செயலர் ஒவ்வொரு மாவட்டத்தின் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரை மாவட்ட வணிகர் நல பற்றாளராக (Nodal Agency) நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட குறிப்பில், முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் தற்போதைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறையில் மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் குழுவினை மாற்றியமைத்து, அதில் மாவட்ட தொழில் மையம் மற்றும் சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர்/உதவிஆணையர்/துணை ஆணையர்கள் (மத்திய வரி) ஆகியோரை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக சேர்க்கலாம் என்றும் மாநிலவரி அலுவலர்களின் பதவிகளை மாற்றியமைக்கலாம் என்றும் ஆலோசனை வழங்கினார்.

4. மத்திய அரசின் தொழில் மற்றும் வர்த்தக துறையின் பரிந்துரை மற்றும் முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையரின் பரிந்துரை ஆகியன அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்குப்பின் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவினை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

**அமைப்பு:**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் – தலைவர்

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:**

1. இணை ஆணையர் (மாநிலவரி) (வருவாய் மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட துணை ஆணையர்கள் (மாநிலவரி) இருந்தால் தலைமையிடத்து துணை ஆணையர் (மாநிலவரி) அல்லாத துணை ஆணையர் (மாநிலவரி) அவரது எல்லைக்குட்பட்ட துணை ஆணையர் (நுண்ணறிவு) சேர்த்துக்கொள்ளும் உறுப்பினர்கள், மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவிலுள்ள அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள்)

2. சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர்/உதவிஆணையர்/துணை ஆணையர் (மத்தியவரி)

3. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம்

**அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் | ஒருவர் |
| முதல்நிலை வேளாண் விளைவிப்போரின் சார்பாளர்கள் | இருவர் |
| தொழில் தயாரிப்பாளரின் சார்பாளர் | இருவர் |
| வணிகர்களின் சார்பாளராக மொத்த விற்பனையாளர் சில்லறை விற்பனையாளர் | இருவர் |
| கூட்டுறவு நிறுவனங்களின் சார்பாளர் | ஒருவர் |
| குடிசைத் தொழில்களின் சார்பாளர் | ஒருவர் |
| நுகர்வோரின் சார்பாளர் | ஒருவர் |

**செயலர்**

வருவாய் மாவட்டத்திலுள்ள தலைமையிடத்து துணை ஆணையர் (மாநிலவரி)

ஆலோசானைக்குழு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:-

(i) இந்த மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுக்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று கூடும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்திற்கு வர இயலாத நாட்களில் அங்கு இருக்கின்ற இணை ஆணையர் (மாநிலவரி) கூட்டத்திற்கு தலைமை தாங்குவார். கூட்டத்திற்கு குறிப்பிடப்படும் நாள் அனைத்து வணிகர்களுக்கும் அறிவிக்கப்படும்

(ii) மாவட்ட ஆட்சியரே உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பார்.

(iii) பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் நடத்தப்பெறும் கூட்டங்களில் விற்பனை வரி சம்பந்தப்பட்ட ஆலோசனைகள்/குறைபாடுகள் மட்டுமல்லாமல், பிற துறைகள்/நிர்வாகங்கள் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள்/ நடைமுறைகள்/குறைபாடுகளும் கூட விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அனைத்து ஆலோசனைக் கூட்டங்களிலும் அரசின் கொள்கை முடிவு சார்ந்த இனங்களைத் தவிர்த்து, இதர இனங்களில் அந்தந்த வட்டார அலுவலகங்களால் உடனடியாக ஆட்சித் தலைவரின் அறிவுரைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்

5. மேலும் அரசு கீழ்க்கண்டவாறும் ஆணையிடுகிறது:-

(i) அலுவல் சார்பற்ற உறுப்பினர்களின் பயணப்படி வழங்குவதற்காக இக்குழு இரண்டாம் நிலைக் குழுவாகக் கருதப்படும். இவ்வுறுப்பினர்களின் பயணப்படி பட்டியல்களை மேலொப்பமிடுவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார்.

(ii) இக்குழுவின் பதவிக்காலம் அரசு ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்றாண்டு காலம் அல்லது இக்குழுவினை மாற்றியமைக்கப்படும்வரை எது பிந்தியதோ அதுவரை ஆகும்.

(iii) இக்குழுக்கள் அமைக்கப்படுவதையும் அதன் நிகழ்வுகளையும் வணிகவரி ஆணையர் கண்காணிப்பார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை—600 005.
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), முதன்மைச் செயலர்/
வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை—5
அனைத்து இணை ஆணையர்கள் (மாநிலவரி)
அனைத்து துணை ஆணையர்கள் (மாநிலவரி)
அனைத்து உதவி ஆணையர்கள்/மாநிலவரி அலுவலர்கள் (மாநிலவரி)
அனைத்து கண்காணிப்பாளர்/உதவி ஆணையர்/
துணை ஆணையர் (மத்தியவரி)
அனைத்து மாவட்ட பொது மேலாளர்கள், மாவட்ட தொழில் மையம்
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர்
மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்), சென்னை—18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை—18
(முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் வழியாக)

நகல்

மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி) அவர்களின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை—9
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை—9
குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை—9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

9/12/21